# திருப்புல்லாணி ஆதிஜெகன்னாதர் கோயிலின் தலவரலாறு

**முனைவர் வ. ரோஜா**
*உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், வரலாற்றுத் துறை*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், இந்தியா*

**முன்னுரை**

ஆதிஜெகன்னாத பெருமாள் கோயில் தென்னிந்தியாவில் உள்ள இந்து மத கோயில்களில் முக்கியமான சிறப்பு வாய்ந்த கோயில். இக்கோயில் இராமநாதபுரத்திலிருந்து தென்கிழக்கே 8 கிலோமீட்டர் தூரத்திலும் தென் சமுத்திரக்கரைக்கு வடக்கே 4 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது. சேதுபதிகளின் வழித்தோன்றளாகிய இராமநாதபுரம் இராணி திருமதி.ஆர்.பிரம்பகிருஷ்ண இராஜராஜேஸ்வரி நாச்சியார் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட 52 சைவ வைணவ தேவாலங்களும். 12 கட்டளைகளும் 27 சத்திரங்களும் இருப்பதில், வைணவாலயங்களில் முதன்மையான தலம் திருப்புல்லாணித் தலமாகும். இத்தலம் இந்துமத கடவுள் அற்பணிக்கப்பட்ட விஷ்ணு, ராமர் தூங்குவதற்கு புல்லை( தமிழில் புல் என்றால் ஒரு தலையணையாக) பயன்படுத்தினார் என்று கூறப்படுகிறது. எனவே இந்த கிராமம் திருப்புல்லானி என்ற பெயரைப் பெற்றது.

**ஆதிஜெகன்னாதர் கோயிலின் தலவரலாறு**

சங்ககால புலவர்கள் ஊர்ப்புனைவுகள் பற்றிக் கூறும்போது திருப்புல்லாணி கோயிலின் தொன்மைப் பெயரையும் குறிப்பிட்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் அதன் பெயர் புல்லங்காடர் என்று கூறப்படுகிறது.

**புல்லாரணியம் (புல்லங்காடர்)**

புல் என்பது முதன்மையானது காடர் என்பது காடு, எனவே காடுகளுக்கு எல்லாம் முதன்மையானதாக விளங்குவது புல்லங்காடர் ஆகும். காடர் நாட்டின் புல் நகரமாக திருப்புல்லாணிக் கோயில் விளங்கியது. காடர் நாட்டின் காவல் படை இருந்த இடமே காடர் நாடு காத்தான் என அழைக்கப்பட்டது. இந்த புல்காட்டுப் பகுதியை அழித்து மக்கள் வாழும் இடமாக செய்திருப்பதாலேயே புல்லங்காடருக்குச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் எனப் பாண்டிய மன்னனுக்கு சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

புல்லங்காடர் என்ற பெயர் கொண்டு சங்ககாலப் புலவர் இத்தலத்தினராதலாலும் தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான பிற்காலத்துத் தெய்வச்சிலையார் என்பருவருக்கு திருப்புல்லாணித் தலத்துப் பொருமாள் திருநாமமிருத்தலாலும் இந்த ஊர் சங்க காலத்தும், பிற்காலத்தும் பெரும் புகழ்பெற்ற ஊர் எனலாம். இத்தலம் தீர்த்தம், மூர்த்தி, தலம் என்ற முச்சிறப்புகளை உடையது. இத்தலம் புராணப் புகழ் பெற்றும், சரித்திரப் புகழ் வாய்ந்தும், சிறந்த திவ்ய தேசமாகவும் விளங்குகிறது.

இத்தலம் விஷ்ணுவின் அவதாரமான இராமபிரான் ஆதிஜெகன்னாதரை வணங்கி அவரால் கொடுக்கப்பெற்ற வில்லைப் பெற்று இராவணனை சம்ஹாராம் செய்து, சீதாவை மீட்டு அடைய அனுக்கிரகிக்கப்பட்டு வந்தது. இத்தலம் இராவணன் தம்பி விபீசணன், இராமபிரானை சரணம் புகுந்து இலங்கைக்கு அரசனாக முடி சூடப்பெற்ற இடம். இத்தலம் கடற்கடவுள் தன் பத்தினியோடு இராமபிரானைச் சரணமடைந்து தன் குற்றத்தை மன்னிக்கப் பெற்ற இடம். இங்குதான் புல்லவா், காலவர், கண்ணவா் போன்ற ரிஷிகள் ஆதிஜெகன்னாதரை சரணமடைந்து பரமபதம் பெற்றார்கள். ஆகவே இது ஒரு சரணாகதி தருமத்தை அநுஷ்டிக்கக்கூடிய விசேஷத்தலம் ஆகும்.

ஆழ்வார்களின் ஈருச்சொற்பட்டு, அருச்சாமூர்த்தியாய் பின்னானார் வணங்கும் சோதியாய்க் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் 108 தேசங்களில் ஈரொன்பதாம் பாண்டி என்றபடி இப்பாண்டியநாட்டில் 18 திருப்பதிகள் உள்ளன. இப்பதினெட்டில் 4வது திவ்யதேசமாக விளங்குவது திருப்புல்லாணி ஆகும். இத்தலம் திருப்புல்லாணி, புல்லாரணியம், ஆதிசேது, திருவணை, தர்ப்பசயனம், நளசேறு, ரத்தினாகரஷேத்திரம், சரணாகதிஷேத்திரம், புல்லங்காடு என்ற திருநாமங்களால் குறிக்கப்படுகிறது.

**இக்கோயிலின் சிறப்பு**

புத்திரப்பேறு இல்லாதவர்கள் இத்தலத்திலுள்ள மூர்த்தியை வணங்கிய பகவான் தனதடியில் அர்ச்சாரூபியாய் அமரப்பாக்கியம் பெற்ற பரிசுத்தமான அரசவிருஷத்தின் நிழலில் நாகப்பிரதிஷ்டை செய்து நிவேதனம் செய்த பாயசத்தை அருந்தினால் புத்திரப்பேறு கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தலத்தில் உள்ள ஆதிஜெகன்னாதர் தசரதருக்கு ராமபிரான் அவதாரம் புரிய அருளியவர் என்பதால், திருவரங்கம் அரங்க நாதனைப் போல் இப்பெருமானும் பெரிய பெருமாள் என அழைக்கப்பெறுகிறார்.

சங்ககாலத்திற்குப் பின் சமய காலத்தில் திருஞான சம்மந்தர் புல்லங்காடர் பாடியமையால் சைவ சமயச் சான்றோர்களும் தமிழ் புலவர்களும் இதனை இன்றியமையாத சைவத்தலமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். சோழநாட்டைச் சார்ந்த ஐயூர் முலங்கிழார் பாண்டியரைப் புகழ்ந்துபாடும் போது புல்லங்காடர் வென்றமையைப் பாடுகிறார்.

புல்லங்காடர் கடந்த உக்கிரப்பெருவழுதி என்று ஐயூர் முலங்கிழார் தன் பாடலின் வாயிலாக கூறியிருக்கிறார். ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் அடிக்குறிப்பிலும் புல்லாரணித்தந்த பெருவழுதி என்று காணப்படுகிறது.

புல்லங்காடர் பிரித்துப் பொருள் கூறும் போது புல் பெருமை காடர் எனப் பிரித்து கூறப்படுகிறது. காட்டின் கண் உள்ள பெரிய சத்திரங்கள் இருக்கின்றனர். பெருங்காடாக மரங்களும், புதர்களும் நிறைந்த காட்டுக்குள் புல்கள் அதிகமாக இருந்தது. எனவே சங்ககாலத்துக் கோட்டையோடு கூடிய ஊரின் பெயருக்கு இறுதியில், காடர் என்று வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. புல் என்பதற்கு காடர் என்றும் பொருள் ஆகும். எனவே புல்லாரணிய இடம் என்பதால் மான்மியம் எனப் பொருள் தருகிறது. எனவே புல் மேலேதிருமால் பள்ளி கொண்ட மாதிரிப் படுத்து இருந்ததால் அந்த இடங்கள் நாளடைவில் சத்தரங்களாக உருவாக்கப்பட்டுள்ளது.

**தேவாரத்தில்**

புல்லங்காடர் என புலவர்கள் போற்றிய தேவார காலத்தில் புல்லை என வழங்கிவந்தது. திருஞானசம்பந்தர்,

**"புல்லைப் பேராளர்**

**பத்மாசஸின் வாய்ப்பன் செய்யும் புல்லை"**

என புல்லாரணியம் பதிகத்தில் பாடியிருக்கிறார்.

**"கற்றார்கள் தொழுதேற்றும் புல்லங்காடரும்"** என ஞானசம்பந்தர் புராணத்திலும்,

**"புல்லங்காடர் யாம் இருப்ப"**என்று கழற்றறிவார் புராணத்திலும் புல்லை என்ற பெயரைக் காணமுடிகிறது.

சுந்தரர் பாடிய புல்லங்காடர் பதிகத்தில் சுந்தரர் பெருமாளைச் சயன ராமர் என ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிடுகின்றார். சுந்தரர் புல்லங்காடர் அண்ணல் என்றோ, புல்லங்காடர் இறைவன் என்றோ பாடாமல் பாடல் தோறும் சயன ராமர் என்றே பெயர் சூட்டிப்பாடினார். சுந்தரர் காலத்தில் இப்பெயர் வழங்கியது என்றும், சுந்தரர்க்கு சயனராமர் பெருமாள் காட்சிதந்தார் என்றும் கூறப்படுகிறது. சயனராமர் பெயர் சொல்லிப் பாடியமையால் இதுவே பிற்காலத்தில் நிலைத்துவிட்டது.

புல்லங்காடருடைய அழகிய தமிழ்ப் பெயரை சுந்தரர் மாற்ற வேண்டும் எனக் கருதியே கனவில் வந்து பெருமாள் சயனராமர் தோன்றினார் என்று பகல் கனவு கண்டதாக திருத்தொண்டர் புராணம் கூறுகிறது.

**ஊர்களுக்குத் தலைமை**

சிற்றரசனாகிய வேங்கை மார்பனின் உரிமையுடைய புல்லாரணியம் உக்கிரப் பெருவழுதியால் பாண்டிய நாட்டோடு இணைத்துக் கொள்ளப்பெற்றது. அன்று தொட்டு அந்நாடு தன்னாட்சி இழந்தது. பாண்டிய நாட்டில் புல்லங்காடர் அதனை ஒட்டிய ஊர்களும் ஒரு கூற்றமாக இணைக்கப்பட்டு புல்லங்காடர் கூற்றம் என அழைக்கப்பட்டது.

**பிற்காலக் கல்வெட்டுச் சான்றுகள்**

பிற்காலப் பாண்டியனாகிய சுந்தரபாண்டியதேவன் காலத்தில் கல்வெட்டு ஒன்று பத்மாசனிக் கோயில் தெற்குச் சுவரில் உள்ளது இதன் காலம் 22-01-1986. இதில் குரோனநாள் புல்லங்காடர் கூற்றத்து காட்டு முடிக்கரை ஊரோரம் சோழமண்டலத்து வடகரை விக்கிரம சோழன் வளநாட்டு இன்னம்பர் நாட்டு என இக்கூற்றத்தின் பெயர் வருகிறது. இன்னும் பல்வேறுக் கல்வெட்டுகளில் தொடர்ந்து வருவதால் புல்லங்காடர் கூற்றம் பழங்காலந் தொட்டே காணப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

**திருப்புல்லாணிக்கோயில் நாடு**

அரசியல் பிரிவு முறைக்குரிய பெயர்களில் புல்லை என்ற பெயர் இன்று பதிவேடுகளில் காணப்படவில்லை. அப்பெயர் திருப்புல்லாணிக் கோயில் என்று மாறியுள்ளமையால் உழவர் பெருமக்களிடமுள்ள நாட்டுப்பிரிவுகளில் திருப்புல்லாணிக்கோயில் நாடு என்று இப்பிரிவு காணப்படுகிறது. இது புல்லங்காடர் கூற்றத்திலிருந்து உண்டாகிய பெயராதல் வேண்டும். ஊர்ப் பெயர் மாறியதற்கேற்ப நாட்டுப் பெயரும் மாறியது என்று கூறப்படுகிறது.

இத்தகைய நாட்டுப் பிரிவுகள் அரசுகளால் வகுக்கப்பட்டவை. அரசு மாறும்போது பெயர்களும் மாறுகின்றன. இவை அரசு ஆவணங்களின் வழக்கில் விழுந்து விட்டாலும் மக்கள் வழக்கில் இன்றும் உள்ளது. அவ்வாறு வழங்கும் பெயர்களில் திருப்புல்லாணிக்கோயில் நாடும் ஒன்றாக கருதப்படுகிறது. இந்நாட்டை ஒட்டிப் பல்வேறு நாடுகள் இருந்தன. அவ்வாறு வழக்கிலிருந்த நாடுகளில் சிலநாடுகள் குறிப்படப்பட்டுள்ளது. அவை ஆர்.எஸ்.மங்கலம் செல்லும் பெருவழிக்கு வடக்கேயுள்ள பகுதி தேவிப்பட்டிணம் நாடு, ஆர்.எஸ்.மங்கலம் பெருவழிக் கோபுரவீதியிலிருந்தும் கிழக்குப்பகுதி கீழக்கரைநாடு, ஆர்.எஸ்.மங்கலம் நாட்டிற்கு மேற்குப்பகுதி நைனார் கோவில் நாடு, தெற்குவீதி சாயல்குடிநாடு, இந்நான்கு நாட்டிற்கும் மையமாக விளங்கியது திருப்புல்லாணிக்கோயில் நாடு ஆகும்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன் இருவருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது. பராக்கிரமன் சிங்களர் உதவியை நாடினான். சோழர்படைக்கும். இலங்கைப் படைக்கும் பெரும்போர் ஆர்.எஸ்.மங்கலம், தேவிப்பட்டிணம், திருப்புல்லாணிக்கோயில் ஆகிய இடங்களில் நடைபெற்றதன் மூலம் திருப்புல்லாணிக்கோயில் வளங்கள் சிதைக்கப்பட்டது. எனவே 12ஆம் நூற்றாண்டில் திருப்புல்லாணிக்கோவில் போர்களமாக இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

மாலிக்காபூரின் படையெடுப்பினால் திருப்புல்லாணிக்கோயிலில் அழிவுகள் ஏற்படவில்லை. ஆனால் மடப்பள்ளி செலவினை ஈடுகட்ட கோயில் வருமானம் பயன்பட்டது என்பதும் கல்வெட்டு தரும் செய்தியாகும். முதலும் இட்டுத் திருப்பணி செய்கையில் மடப்பள்ளித் திருப்பணி தர்மகர்த்தா தர்மபரிபாலர் தன்மமாக அமைவது என இக்கல்வெட்டு கூறுகிறது.

தொல்காப்பியத்தில் புல்லாரணியம் என சங்ககாலத்தில் புனையப்பட்டப் பெயர் காலப்போக்கில் புல்லங்காடர் என்று காரணப்பெயரானது. பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில்

புல்லை என்ற எச்சம் நீங்கி புல்லங்காடா் என வழங்கி வந்தது. காலப்போக்கில் திருப்புல்லாணிக்கோயில் என்ற பெயர் நிலைத்து விட்டதாக தெளிவாகத் தெரிகிறது.

**முடிவுரை**

திருப்புல்லாணிக்கோயிலில் அமைந்திருக்கும் ஆதிஜெகன்னாத பெருமாள் பல சிறப்புகளை பெற்று விளங்குகிறது. கோயிலின் முக்கிய தெய்வமாகத் திகழும் பத்மாஸஸீன் என்ற பெயர் தான் நாளடைவில் மருவி திருப்புல்லாணி கோயில் என மாறியதாக தெரியவருகிறது.

**மேற்கோள்கள்**


1. கோ.தங்கவேலு, தமிழகச் சமூகப்பண்பாட்டு வரலாறு, தமிழ் வளர்ச்சி இயக்கம், குறளகம், சென்னை.
2. அ.மு.பரமசிவானந்தம், தமிழக வரலாறு,தமிழ் கலைப் பதிப்பகம், சென்னை, 1995
3. க.ரத்தினசாமி,பண்டை தமிழர் வரலாறு பண்பாடு, ஸ்ரீவேலவன் பதிப்பகம், சிதம்பரம்,2000
4. சுப.செந்தமிழன், புகழ்பெற்ற ஆலயங்கள், உமா அச்சகம், இராமநாதபுரம், 1986
5. கோவி.மணிசேகரன், திருபுல்லாணி கோவில் ரதம், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1994
6. மீ.மனோகரன், சேதுபதிகளின் மன்னர்ககள், அன்னம் (பி)லிமிடெட், இராமநாதபுரம், 1994
7. பெ.சு.மணி, பக்தி இயக்கங்கள் வழியே சமூகச் சீர்திருத்தம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2001
8. பத்மாஸஸீன், புல்லங்காடர் என்னும் திருபுல்லாணி கோவில் தல வரலாறும் திருமுறையும், இராமநாதபுரம், 1959
9. வே.காத்தமுத்து, புல்லங்காடர் என்ற திருப்புல்லாணி கோவில் தல வரலாறு, அன்னைஆப்செட் பிரிண்டர்ஸ், திருப்புல்லாணி கோவில், 2004
10. கே.கே.பிள்ளை, தென்னிந்திய வரலாறு, பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1994
11. வே.திருவரங்கராசன், புல்லங்காடர், ஞானபீடம் பதிப்பகம், இராமநாதபுரம், 1998
12. G.O MS.NO.1122,Revenue Department, dt.06.07.1984
13. மு.சேகர், வீரம் விளைந்த இராமநாதபுரம் செம்மண், முத்து மீனா புத்தகப்பண்ணை, திருபுல்லாணி கோவில், 1990
14. செ.வைத்தியநாதன், சிற்பக்கலை, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2003
15. லேனா தமிழ்வாணன், பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987
16. வே.மாதவன், தமிழில் தலபுராணங்கள், பாவை பப்பிலிகேசன்ஸ், தஞ்சாவூர்
17. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரீகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, 1994
18. South –Indian Inscriptions,Vol, VIII, 166, A.R.No. 575 of 1902, The Director, (Epigraphy), Mysore, on behalf of the Director General, Archaeological Survey of India, 1986.
19. South –Indian Inscriptions,Vol, VIII, 171, A.R.No. 579 of 1902, The Director, (Epigraphy), Mysore, on behalf of the Director General, Archaeological Survey of India, 1986.